பக்கங்கள் நான்கு	விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05	ஒலி 71	பிரமோதூத	தை 24
(06 - 02 - 1991)	புதன்

## முகாம்களை காட்டுமாறு பயணிகள் மீது தாக்குதல்

கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்த சில இளைஞர்களை ... வில் படையினர் சோதனை எனக்கூறி அழைத்துச் சென் ... அங்குள்ள மாற்றுக் குழுக்கள் விடுதலைப்புலிகளின் முக்கிய ... இடங்களையும் முகாம்களையும் காட்டச்சொல்லி வற்புறுத்தி... இவர்கள் தமக்கு ஒன்றும் தெரியாது எனக் கூறியதும் படையினரால் பலமாகத் தாக்கப்பட்டார்கள் இத்தாக்குதலினால் சி. சந்திரன் (26) (கொக்குவில்) என்பவருக்கு கைமுறிந்தது விசாரணையின் பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டனராம். (ப 11)

## தி. மு. க. அரசு கலைக்கப்பட்டதை எதிர்த்து

# தமிழ் நாட்டில் ஹர்த்தால்!

# பரா ராணுவம் விரைகிறது

## வெங்கடராமன் வீட்டருகில் வெடி குண்டு

தி. மு. க ஆட்சி கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து இன்று தமிழகத்தில் முழு அளவிலான ஹர்த்தால் நடைபெறுகிறது. தேசிய முன்னணி கட்சிகள் இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

இன்றைய ஹர்த்தாலை முன்னிட்டு பரா இராணுவத்தின் சில பிரிவுகளை உடனடியாக தமிழகத்துக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. இது வரையுள்ள பரா இராணுவத்தின் எட்டு பிரிவுகளுடன் மேலதிகமாக ஆறு பிரிவுகள் சென்னைவிரைவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இதுவரை பதினையாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இவர்களில் முன்னாள் தி. மு. க சட்டப்பேரவை உறுப்பினர்கள், எம். பிக்களும் அடங்குவர் சென்னையில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## குண்டு வீச்சு சேதங்களை பார்வையிட செஞ்சிலுவையின் விசேட பிரிவு

அண்மைக்காலமாக பொது மக்களின் இலக்குகள் மீது ஸ்ரீலங்கா விமானப் படையினால் நடத்தப்படும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நேரடியாகச் சென்று பார்வையிடுவதற்கும், அது சம்பந்தமான அறிக்கைகளை

—04 ஆம் பக்கம் பார்க்க

## சிறுவன் காயம்

நிலத்தில் கிடந்த துப்பாக்கி ரவையைச் சோதித்துப் பார்த்த சிறுவன் ஒருவன் அந்த ரவை வெடித்து காயமடைந்தார்.

நல்லூர் அரசடியைச் சேர்ந்த எஸ். பிறேம்நாத் (15) என்ற சிறுவனே காயமடைந்தார். (70)

## பண்ணைக் கடலில் வந்த படகுமீது ஹெலியில் இருந்து தாக்குதல்

நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் பண்ணைக் கடலில் பிரயாணம் மேற்கொண்டிருந்த பயணிகள் படகுகள் மீது ஹெலிகொப்டர் ஒன்று தாக்குதலை மேற்கொண்டது.

இப் படகுகளில் தீவுப்பகுதியில் இருந்து மக்கள் யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்தனர், துப்பாக்கி தாக்குதலை தொடர்ந்து படகில் பயணம் செய்த ஆண்கள் பெண்கள் சிறுபிள்ளைகள் யாவரும்

...04 ஆம் பக்கம் பார்க்க

## சிவாவின் "சித்திரக் கோத்து" சாகித்திய விழா பரிசுக்கு தேரிவு

சிரித்திரன் ஆசிரியர் சிவஞானசுந்தரத்தின் 'சிரித்திரன் சித்திரக் கொத்து' நூலுக்குச் சாகித்திய விழா பரிசு கிடைத்துள்ளது.

1989 இல் வெளிவந்த படைப்புக்களில் 'ஏனைய துறைகள்' என்ற ரீதியில் 'சிரித்திரன் சித்திரக்கொத்து' சாகித்திய விழா பரிசுக்குரியதாகத் தெரிவாகியுள்ளது.

...04 ஆம் பக்கம் பார்க்க

## கோப்பாய் பயிற்சி கலாசாலையில் பயிலுநர் ஆசிரியர் மீது 'ராக்கிங்'

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கடந்த 28 ஆம் திகதி புதிய ஆசிரிய நேர்முகப் பரீட்சைக்கு வந்திருந்த பயிற்சி ஆசிரியர்கள் மீது 'ராக்கிங்' நடைபெற்றதாக நேர்முகப் பரீட்சைக்கு சென்று திரும்பிய ஆசிரியைகள் தெரிவிக்கின்றனர். ஆசிரியைகளிடம் சிலர் பண்புக்குறைவாக நடந்து கொண்டதாகவும் தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 11, ப17)

## பருத்தித்துறையில் கடலில் தாக்குதல்

பருத்தித்துறைக் கடலில் நேற்று மீன்பிடிக்கச் சென்ற மீனவர் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், அவர்களைக் கைது செய்து சித்திரவதை செய்த பின் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

## தச்சன்காடு. மாவிட்டபுரத்தில் இரவு கடும் மோதல்

நேற்று இரவு 9. 15 மணியளவில் மாவிட்டபுரம், தச்சன்காடுபகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்,

இதனையடுத்து அப்பகுதியில் ஒரே ஷெல் தாக்குதல்கள் பரா வெளிச்சத்தின் மத்தியில் மேற்கொள்ளப்பட்டன,

செய்தி அச்சுக்குப் போகும் வரை இருபகுதியினருக்கும் இடையில் மோதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. (48)

## விவசாயிகளுக்கு புலிகள் மண்ணெண்ணெய் விநியோகம்

விடுதலைப் புலிகள் பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு தலா ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் நேற்றுக் கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகம் செய்தனர்.

சிற்றூர் அவைத் தலைவரினால் விவசாயம் செய்பவர் என்று உறுதிப்படுத்தி வழங்கப்பட்ட கடிதத்தைக் கொண்டு வந்தவர்களுக்கும், கமத்தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விவசாய அடையாள அட்டையைச் சமர்ப்பித்தவர்களுக்கும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி கட்டடத்தில் வைத்து இந்த மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டது. (13)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு மருந்து வகைகள் வரவில்லை

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் இப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பெரிய ஆஸ்பத்திரியான இதில் சிகிச்சை பெறத் தினமும் ஆயிரக்கணக்கானோர் வருகின்றனர். தற்போது மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோய்களும் இப்பகுதியில் பீடித்துள்ளது. (ப 6)

## இளவாலையில் ஹெலி சூடு

நேற்று இளவாலை பெரியவிளான் பகுதியில் ஹெலியிலிருந்து கண்மூடித்தனமாக கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நண்பகல் 12 மணியளவில் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் பெரும் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (70)

## 600 ஓய்வூதிய மூலப்பிரதிகள் யாழ் செயலகம் வந்தன

கொழும்பில் பல மாதகாலமாகத் தேங்கிக்கிடந்த அறுநூறுக்குமதிகமான ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான மூலப் பிரதிகள் நேற்று யாழ் செயலகத்தை வந்தடைந்துள்ளன.

விதவைகளுக்கான பென்சன் கொடுப்பனவுகளை உடனடியாக வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் தற்போது ஓய்வூதியப் பிரிவினர் எடுத்துள்ளனர்.

ஏனையோருக்கான கொடுப்பனவுகளையும் இரு வாரங்களுக்கிடையில் வழங்க தாம்

...04 ஆம் பக்கம் பார்க்க

தற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.

## சு பதவி வெற்றிடம்

மேற்படி எமது சங்கத்தின் பின்வரும் பதவிக்கு கீழ்வரும் தகைமையுள்ள இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் 'தலைவர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி. என்னும் விலாசத்திற்கு தபாலின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் இடப்பட்டு 18-02-91 அன்று நண்பகல் 12 00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்து உறுதிப்படுத்தவும். கீழ்வரும் தகைமைகளுக்கு அமைவாக உள்ள விண்ணப்பங்கள் மாத்திரம் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

பொதுமுகாமையாளர்
பதவி வெற்றிடம் (101/6)

சம்பள அளவுத்திட்டம் மாதம்:
1305 - 60 × 4-75 X 11-2370-ம்
அங்கீகரிக்கப்பட்ட படிகள் யாவும்

1. கல்வித்தகைமைகள்:-

i கூட்டுறவு ஊழியர் 7:ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டத்தில் மூன்று வருடத்துக்கு குறையாத அனுபவமும் அல்லது கூட்டுறவு ஊழியர் 8 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்தில் ஆறு வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

'அல்லது'

ii அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் அல்லது அதற்கிணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்பதாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் நான்கு வருடத்திலான அனுபவம்.

'அல்லது'

iii கூட்டுறவுப் பணியாளர் உயர்பிரிவு தராதரப்பத்திரம் அல்லது க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் நுட்பதாபனமொன்றின் முகாமைமட்டத்திலான பதவியில் ஆறுவருடங்களுக்குக்குறையாத அனுபவம்.

2. வயது:- 25 தொடக்கம் 50வரை.

முக்கிய குறிப்பு:-

i சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களினதும், அனுபவ சான்றிதழ்களினதும், கல்விச் சான்றிதழ்களினதும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினதும் போட்டோப்பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

ii மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போரின் தகைமையுடையர்கட்கு 22-02-1991 மு.பகல் 10 00மணிக்கு நேர்முகப் பரீட்சை எமது சங்கக்காரியாலயத்தில் (பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி) நடைபெறும்.

தலைவர்
கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
04-02-91 கிளிநொச்சி.

02037

# றோகணவைக் கைது செய்த லெப்டினனட் கேர்ணல் தலைமையில்

# ஸ்ரீலங்கா இராணுவத்தில் புதிய படைப்பிரிவு!

ஸ்ரீலங்கா இராணுவத்தில் மேலுமொரு புதிய படைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. 'ஆர்.டி.எப்' என அழைக்கப்படும் இப் பிரிவை 'விரைவாகக் குவிக்கப்படும் கொமாண்டோப் படைப் பிரிவு' எனக் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் வர்ணித்துள்ளனர்.

ஜே.வி.பி தலைவர் றோகண விஜயவீரவைக் கைது செய்த லெப்டினன்ட் கேர்ணல் காமினி ஹெட்டி ஆராய்ச்சி இப் புதிய படைப்பிரிவுக்குத் தலைமை தாங்குவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (16)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அல்சேசன்நாய் (1½ வருடம்; Car A-40 Ferina), Audio Tape Recorder (Pioneer) Box உடன் ஆகியன விற்பனைக்குண்டு, No. 22, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

02043

### விற்பனைக்கு

துரித சலவைக்குச் சிக்கன சாதனம் மில்க்வைற் சலவைப் பவுடர். 100 வெற்றுப் பைக்கற் சேர்ப்பித்து ஒரு கைலேஞ்சி அன்பளிப்பாகப் பெறுங்கள். மில்க்வைற் -யாழ்ப்பாணம். 02042

### தேவை

நாட்டுத் தேக்கு (கல் தேக்கு) விதைகள் தேவை. மில்க்வைற்-யாழ்ப்பாணம். 02041

### விற்பனைக்கு

அளவெட்டி மேற்குக்கிராமிய உற்பத்திக் குழுவினரால் சிறந்த இனக்கத்தரி, தக்காளி, மிளகாய், கறிமிளகாய், கோவா, பூக்கோவா, இலைக்கோவா, நல்லினத் தென்னங்கன்றுகள் மற்றும் சில விதை வகைகளும் மலிவான விலையில் விற்பனை செய்யப் படுகிறது. தொடர்பு: மூர்த்தி, குமணன் வீதி, அளவெட்டி தெற்கு (எரிந்த பேக்கரி முன்பாக). 02006

### வகுப்பு

(DEUTSCH) —German Language Classes ஜெர்மனியில் பட்டப் படிப்புக்களைத் தொடர்வதற்கு உதவும்முகமாக மேற்படி வகுப்புக்கள் 11-02-91 திங்கள் ஆரம்பமாகின்றன. தொடர்பு கொள்க: S Sorna- lingam Secretary, German Cultural Association, 4, Gopal Lane, Vannar- Pannai (மனோகராத்தியேட்டர் அருகாமையில்.) 02040

## பாடசாலை மாணவர்க்கு உளவியற்கல்வி!

## ஆசிரியர்களுக்கு முதலில் கொழும்பிற்பயிற்சி

பாடசாலை மாணவர்களுக்கு உளவியல் அறிவைப் புகட்டும் திட்டமொன்றை கல்வி அமைச்சு நடைமுறைப் படுத்தவுள்ளது.

இதற்கு முன்னோடியாக சகல கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் மனோவியல் அபிவிருத்திப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

ஆரம்பத்தில் இப்பயிற்சி மகரகமவிலுள்ள கல்வி அமைச்சின் தேசிய கல்வி நிறுவனத்தில் வழங்கப்படும். பின்னர் மாவட்ட மட்டத்தில் இது பன்முகப்படுத்தப் படும்.

மகரகமவில் முதற்தொகுதியில் பயிற்சி பெறுவதற்கு கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைத் தெரிவு செய்து அனுப்புமாறு சகல கல்விப் பணிப்பாளர்களும் கேட்கப் பட்டுள்ளனர்.

ஒவ்வொரு தொகுதியினருக்கும் இரண்டுவாரகால முழு நேரப்பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் கடமை விடுமுறை, இலவச உணவு, மற்றும் பிரயாண வசதி என்பன வழங்கப்படும்.

முதலாவது தொகுதியினரின் பயிற்சி முடிவடைந்ததும் இரண்டாவது தொகுதியினருக்கு பயிற்சி ஆரம்பமாகும்.

மாணவர்களின் உளவியலை அறிந்து அதற்கேற்ப பாடங்களை போதிப்பதற்கான பயிற்சி இத்திட்டத்தின்கீழ் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளது. (ப-17)

## கோண்டாவிலில் தாச்சிப்போட்டி

தாச்சி சுற்றுப் போட்டியொன்று கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் 11 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

## உங்களுக்கு உரியதா?

மானிப்பாய் - சுதுமலை தெற்கு வாசியான தியாகராசாபாபு என்பவருடைய தேசிய அடையாள அட்டை வவுனியாவில் கண்டெடுக்கப் பட்டு நமது வவுனியா செய்தியாளரினால் முரசொலி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## உருத்திரபுரத்தில் மரணதண்டனை

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக இருந்துகொண்டு பணமோசடி, மற்றும் முறைகேடான பாலியல் உறவு முறைகளில் ஈடுபட்டுள்ள மைக்காக செல்வா என்பவருக்கு உருத்திரபுரத்தில் பகிரங்கமாக மரணதண்டனை வழங்கப்பட்டது என்று விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது. (71)

## கப்பலில் பசளை

மன்னாருக்குக் கப்பல் மூலம் பத்தாயிரம் பசளைப் பைக்கற்றுக்கள் வந்து சேர்ந்துள்ளன.

இவை கப்பலில் இருந்து இறக்கும் வேலை முடிவடைந்து, அவ்வப்பகுதி கமநலச் சேவை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அமோனியா. ரீ. டி எம். என்பனவே கப்பலில் வந்துள்ளன. விவசாயிகளுக்குத். தலா இரண்டு மூடை வீதம் கமநலச் சேவை நிலையங்களால் இவை பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. (17)

## மன்னாரில் தபால் சேவை

மன்னார் நகர்ப் பகுதியில் கொழும்புத் தபால்கள் தற்போது விநியோகிக்கப் படுகின்றன.

தபாலகமும் சீராக இயங்கி வருகிறது. கொழும்புத் தபால்கள் கப்பல் மூலம் அனுப்பப் பட்டு, அவ்வாறே வந்துசேர்கின்றன. உள்ளூர்த் தபால் சேவையும் நடைபெற்று வருகின்றது. (17)

# விடுதலை அமைப்புக்களை உள்ளடக்கிய புதிய
# மாற்று ஐ.நா.சபை நெதர்லாந்தில் உதயம்!

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்காத நாடுகள், மற்றும் சிறுபான்மை இனங்கள், மக்கள் விடுதலை இயக்கங்கள் என்பன அங்கத்துவம் வகிக்கும் புதிய மாற்று ஐக்கிய நாடுகள் சபையொன்று புதிதாக ஏற்படுத்தப்படவுள்ளது.

இந்த புதிய சுதந்திர அமைப்பு அடுத்த வாரம் முதல் நெதர்லாந்தில் இயங்கவுள்ளதாக அதன் அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

விடுதலை அமைப்புக்கள், சுதந்திரம் நாடும் மக்கள், சிறுபான்மை இனங்கள் என்பன தங்கள் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் ஒரு சுதந்திர அமைப்பாக இந்த மாற்று ஐ. நா. சபை திகழவுள்ளது.

முதலில் 20 உறுப்பினர்கள் இச்சபையில் இருப்பர் எனவும், தகுதியான விடுதலை அமைப்புக்கள் அங்கத்துவம் பெற விண்ணப்பிக்கலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத் மோல்ட்டிக் குடியரசுகள், அவுஸ்திரேலிய பூர்வீகக்குடி அமைப்புக்கள் என்பன இந்த மாற்று ஐ. நா. சபையில் அங்கத்துவம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தொலைக்கல்வி-பயிற்சி விண்ணப்பம்

தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெறும் 1989-91 கல்வியாண்டிற்கான பயிற்சி ஆசிரியர்களின் இறுதிப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் உடனடியாக அனுப்பப்பட வேண்டியுள்ளதால் 1989-91 கல்வியாண்டில் பயிற்சி பெறும் சகல பயிற்சி ஆசிரியர்களையும் 8ஆம் திகதி யாழ் இந்துக்கல்லூரியில் அமைந்திருக்கும் யாழ் மாவட்டத் தொலைக்கல்விப் பிரிவு அலுவலகத்திற்குப் பிறப்புச் சாட்சிப் பத்திரம் உட்பட சகல சான்றிதழ்களுடனும் சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட தொலைக்கல்விப்பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் ம. செ. அலெக்ஸாந்தார் கேட்டுள்ளார்.

இதேவேளை 1989-91ம் கல்வியாண்டிற்கான பயிற்சி ஆசிரியர்களுக்கும் 1990-92 கல்வியாண்டிற்கான பயிற்சி ஆசிரியர்களுக்கும் இம்மாதம் ஒன்பதாந்திகதி ஒரு நாள் கற்கை வட்டம் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-5)

## திருமலைத் துறைமுகத்தைப் பயன்படுத்த அமெரிக்கப் போர்க்கப்பல்களுக்கு அனுமதி?

வளைகுடாப் போரில் ஈடுபடும் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகளின் போர்க்கப்பல்கள் திருமலை, கொழும்புத் துறைமுகங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக அரச வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது.

இது பற்றி ஆராய்வதற்கென ஆறு அமைச்சர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது.

அமெரிக்கப் போர்விமானங்களுக்கு கட்டுநாயக்காவிமான நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் விபரம் சேகரிப்பு

வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு தற்போது வடகிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், அதிபர்கள் சம்பந்தமான விபரங்களைச் சேகரித்து உடனடியாக அனுப்பி வைக்குமாறு ஒவ்வொரு கோட்டக் கல்வி அதிகாரிகளையும் பணித்துள்ளது.

1990 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஆளணி, தற்போதுள்ள ஆளணி வெற்றிடமாகவுள்ள ஆளணி சம்பந்தப்பட்ட விபரங்களைச் சேகரித்துத் தமக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு அமைச்சு கேட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு பாடசாலைகளிலும் அதிபர்கள், ஆசிரியர்கள் பாவிக்கும் விடுதிகள் பற்றிய விபரங்களையும் மாகாணக்கல்வி அமைச்சு கோரியுள்ளது. (ப-17)

## பாதிப்பு நஷ்டஈடு பெறும் ஊழியரிடம் 2 வருடசம்பள கடன்வட்டி அறவிடத்தடை!

இரண்டுவருட சம்பள முற்பணக் கடனைப் பெற்றுள்ள ஊழியர், ஆசிரியர்கள் எவருக்காவது வன்செயலில் பாதிப்பு நஷ்ட ஈடு பெற அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அவர்களிடமிருந்து முற்பணக் கடனுக்காக அறவிடப்பட்ட வட்டிப்பணம் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டுமெனப் பொது நிர்வாக அமைச்சு பணித்துள்ளது.

அத்துடன் இவர்களுக்குரிய நஷ்ட ஈடு வழங்கப்படும்போது இவர்கள் பெற்ற முழுக்கடனுக்குரிய தொகையும் கழிக்கப்படல் வேண்டுமெனவும் பணிக்கப்பட்டுள்ளது.

ஆனால் நஷ்டஈடு வழங்கப்படாமல் உள்ள ஏனைய சம்பள முற்பணக் கடன்பெற்ற ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு கடன் தொகையும், வட்டியும் மாதாமாதம் தொடர்ந்து கழிக்கப்படல் வேண்டுமெனவும் பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. (ப-17)

## அரபுநாடுகளில் தினமும் புதிய 'சதாம்'கள் உருவாகுகிறார்கள்

அரபுநாடுகளில் தற்போது பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கு 'சதாம்' என்னும் பெயரைச் சூட்டுவதில் அப்பகுதியிலுள்ள பெற்றோர் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனராம்.

பன்னாட்டுப்படைகளுக்கு எதிராகப் போராடும் ஈராக்கிய ஜனாதிபதி சதாம்ஹுசைன் அரபு மக்களின் பெரும் மதிப்புக்குரியவராகக் கருதப்படுகின்றார் என்பதையே இது எடுத்துக்காட்டுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜோர்தானில் மட்டும் கடந்த ஒரு வாரகாலத்தில் 100 குழந்தைகளுக்கு சதாம் என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தனது குழந்தை பெயரில் மட்டுமல்லாது செயலிலும் வீரனாகவே திகழவேண்டுமென ஜோர்தானியத் தாய் ஒருவர் தெரிவித்தார்.

'சதாம்' என்பதற்கு அரேபிய மொழியில் 'யுத்தம்' என்றொரு கருத்தும் உண்டு. (16)

## 'அழகிகளுக்கு' வவுனி[யாவில்] ஆபத்துக் காத்திருக்கிறது!

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகள் கொண்டுவரும் கலண்டர்களை வவுனியா தடைமுகாமில் வைத்து இராணுவத்தினர் ஒவ்வொன்றாக எடுத்து சோதனை செய்கின்றனராம்.

அழகான பெண்களின் படங்களுள்ள கலண்டர்களை இராணுவத்தினர் 'அபேஸ்' பண்ணுவதில் போட்டி போடுகின்றனராம்.

சில தினங்களுக்கு முன்னர் அரைகுறை ஆடையுடன் பெண்மணி ஒருவர் 'போஸ்' கொடுக்கும் படம் பொறிக்கப்பட்ட கலண்டர் ஒன்றைக் கொண்டு வந்த ஒருவருக்கு இராணுவத்தினர் வழமையான சோதனைக் கெடுபிடிகள் எதனையும் காட்டவில்லையாம். அவர்கள் அந்தக் கலண்டரை மட்டும் 'பாசத்தோடு' பெற்று விட்டு ஆளை 'நன்றி உணர்வுடன்' விட்டுவிட்டார்களாம். (12)

## நடிகர் தேர்வு

பங்குனி மாதத்தில் நாடக அரங்கக் கல்லூரியினால் மேடையேற்றப் படவுள்ள நாடகம் ஒன்றுக்கு இன்று யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடிகர் தேர்வு நடைபெறவுள்ளதாகவும் ஆர்வமுள்ள இருபாலாரும் இந் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம் எனவும் அறிவிக்கப்படுகிறது.

★ கலைஞரின்மனோகர(ா)வசனம்

## 'சாவுக்கு அஞ்ச மாட்டான்! காரணமில்லாது சாகமாட்டான்!'

சென்னையில் சர்வதேச திரைப்பட விழா தொடக்க நிகழ்ச்சியில் பிறநாட்டு - மாநில பிரதிநிதிகள், கலைஞர்களை வரவேற்றுப் பேசிய முன்னை நாள் முதல்வர் கருணாநிதி "இந்த அழகிய அமைதியான சென்னை நகரத்துக்கு உங்களை வரவேற்கிறேன்" என்றார்.

சட்டம் - ஒழுங்கு தமிழ்நாட்டில் சீர்குலைந்து பஞ்சைப் போல காட்சியளிக்கிறது என்று இ காங்கிரஸ், அ. தி. மு. க., மத்திய அரசு கூறி வந்த பிரசாரத்துக்கு அவர் இவ்வாறு நறுக்கெனப் பதில் அளித்தார்.

ஆட்சிக் கவிழ்ப்பு வதந்தி உச்ச நிலை அடைந்ததும் திரைப்படப் பவள விழாவில் பேசுகையில், மனோகரா பட வசனத்தை அவரே பேசிக்காட்டி, பின்வருமாறு சொன்னார்:

"மனோகரா படத்தில் கதாநாயகன் சிவாஜி இந்த வசனத்தை அருமையாகப் பேசினார். இந்த நினைவுகள் நிழலாடும்போது வசந்த சேனை என்கிற வட்டமிடும் கழுகின் பிடியில் சிக்கிய மன்னர் புருஷோத்தமன் பாத்திரம் நினைவுக்கு வருகிறது.

'பொறுத்தது போதும். பொங்கி எழு' என்று மகன் மனோகரனைப் பார்த்து வீர முழக்கமிட்ட பத்மாவதி நினைவுக்கு வருகிறாள். கட்டுண்டு கிடந்த மனோகரன் சிங்கமெனச் சீறிப்பாய்ந்த காட்சியெல்லாம் நினைவுக்கு வருகிறது.

'மனோகரன் சாவுக்கு அஞ்சமாட்டான், காரணமில்லாமல் சாகமாட்டான்' என்று நான் எழுதிப்படத்தில் இடம் பெறாத வசனம் நினைவுக்கு வருகிற[து]. இந்த நேரத்தில் சொல்ல அது பயன்பட்டிருக்கிறது" என்றார் கருணாநிதி,

REGISTERD AS A NEWS PAPER IN SRI LANKA 06-02-1991 புதன்கிழமை

# ளகுடாவில் அமெரிக்கத் துருப்புக்களின் குவிப்பு பூர்த்தியாகி விட்டதாக அறிவிப்பு

ஈராக்குடனான போரில் ஈடுபடுவதற்கென வளைகுடாவில் குவிக்கப்பட்டு வந்த அமெரிக்கத் துருப்புகளின்எண்ணிக்கை இலக்கை எட்டிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக் செனி நேற்று வெளியிட்டார். அமெரிக்கத் துருப்புகளின் சரியான தொகையை வெளியிடாத செனி, எதிர்காலத்தரைத்தாக்குதலுக்கு முகம் கொடுக்க வேண்டிய அளவுக்கு படைக் குவிப்பு பூரணமாகி விட்டது என மட்டும் குறிப்பிட்டார். இரண்டாம் உலகப் போரின் பின்னர் இவ்வளவு பெருமளவு அமெரிக்கத் துருப்புகள் குறுகிய காலத்தில் குவிக்கப்பட்டமை இதுவே முதற்தடவையாகும்.

### ஈராக்கில் எரிபொருள் வழங்கல் நிறுத்தம்

ஈராக் மீது அமெரிக்க நேச நாட்டுப்படைகளின் தாக்குதலை தொடர்ந்து அங்குள்ள எண்ணெய் வழங்கல் நிலையங்கள் சேதமாகி விட்டன. இதனால்ஈராக்தனது மக்களுக்குப் பங்கீட்டு அடிப்படையில் இதுவரை வழங்கிய எரிபொருள் விநியோகத்தை நேற்று முதல் நிறுத்தியுள்ளது. இதுவரை இருவாரத்திற்கு ஏழு லீற்றர் எனும் அடிப்படையில் எரிபொருள் வழங்கப்பட்டு வந்தது.

இதே நிலை ஜோர்டானில் ஏற்பட்டுள்ளது. ஈராக்கில் இருந்து எரிபொருள் ஏற்றிச் சென்ற எட்டு கனரக ட்ரக் வண்டிகளை அமெரிக்க விமானங்கள் குண்டு வீசி அழித்தன அதில் சென்ற சாரதிகளும் பலியாகினர். இதைத் தொடர்ந்தே ஜோர்தான் சாரதிகள் ஈராக் செல்ல மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

### குவைத் கரையோரம் மிசூரி தீவிரம்

குவைத் கடலோரமாக மிக அருகில் தரித்து நிற்கும் அமெரிக்கக் கடற்படைக்கப்பல் மிசூரி தொடர்ந்து தனது தீவிர தாக்குதலை குவைத்தில் உள்ள ஈராக்கிய இலக்கு மீது நடத்திவருவதாக அறிவிக்கப்படுகிறது. மிசூரியில் உள்ள 25 மைல்களுக்குத் தாக்குதிறன் கொண்ட ஆறு அங்குல பீரங்கிகள் தொடர்ந்து முழங்கியவாறு உள்ளன.

ஈராக் மீதும் குவைத்தில் உள்ள ஈராக்கிய இலக்குகள் மீதும் இதுவரை நாற்பதாயிரம் தரம் அமெரிக்க நேச நாட்டுப்படைகள் விமானத் தாக்குதலை நடாத்தியுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதுவரை இத்தாக்குதலினால் ஈராக்கின் குடியரசுப்படை எனப்படும் கவச வாகன அணிக்கு பெருமளவு பாதிப்பு ஏற்பட்டதா என்பது சந்தேகமே என பிரிட்டனின் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

## அ. தி. மு. க. இந்திரா காங்கிரஸ் தொகுதி உடன்பாடு கண்டன

புதுடில்லி சென்றுள்ள அ. தி. மு. க. பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா நேற்று இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியுடன் நடாத்திய இரு மணி நேரப் பேச்சுகளைத் தொடர்ந்து இருகட்சிகளிடையே தொகுதி உடன்பாடு காணப்பட்டுள்ளது

எதிர்வரும் தமிழக சட்டப் பேரவை தேர்தலில் மொத்த 234 தொகுதிகளில் 168 தொகுதிகளில் அ. தி. மு. கவும் 66 தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் உம் போட்டியிட இருவரும் உடன்பாடு கண்டுள்ளனர்.

1989இல் நடந்த சட்டப் பேரவை தேர்தலில் இவ்விரண்டு கட்சிகளும் தனித்தனியாகவே போட்டியிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜீவுடனான பேச்சுகளைத் தொடர்ந்து புதுடில்லியில் செய்தியாளர்களிடையே பேசிய ஜெயலலிதா முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் ஊழல் நடவடிக்கைகள் குறித்து விசாரணை கமிஷன் ஒன்றை மத்திய அரசு நியமிக்க வேண்டும் என்றார்.

---

## அஞ்சலிக் கூட்டம்

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கண்ணீர் அஞ்சலிக் கூட்டம் நாளை 7ஆம் திகதிபிற்பகல்2மணிக்கு இடம்பெறும்.

---

**சிவாவின்...**

'சிரித்திரன் சித்திரக் கொத்து'க்குப் பரிசு கிடைத்துள்ளமை 'திறமைக்கு எப்பொழுதும் கௌரவம் கிடைத்தே தீரும்' என்பதை நிரூபிப்பதாக உள்ளதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று எழுதியுள்ளது.

---

**குண்டு...**

தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைப்பதற்கும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் தனியான விசேட பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் முதல் இப்பிரிவு இயங்கிவருகிறது என்றும் மருதங்கேணிப் பகுதியில் நடைபெற்ற விமானத் தாக்குதல் பற்றி நேற்று முன்தினம் இப்பிரிவு அங்கு நேரடியாக சென்று பார்வையிட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

---

**பண்ணைக்...**

கடலில் பாய்ந்து உயிர்தப்பினர். இப்படகில் அரசாங்க உத்தியோகத்தர்கள். வியாபாரிகள் என்போர் பயணம் மேற் கொண்டிருந்தனர்.

இந்த ஹெலிக்கொப்டர் கோட்டைப் பகுதியையும் நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தது,போதனா வைத்திய சாலை பாதுகாப்பு வலயத்தின் உள் இருந்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இது குறித்து உடனடியாக கொழும்புக்கு அறிவிக்கப்பட்டதாகவும் செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (24, 74)

---

**தமிழ்...**

மட்டும் ஆயிரத்து நானூறு பேர் கைதாகியுள்ளனர் அடையாறில் கைது செய்யப்பட்ட பத்து இலங்கையரும் இவர்களுள் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வன்முறைச் சம்பவங்கள் நிகழலாம் என்ற காரணத்தினால் இன்று தமிழகபோக்குவரத்துத்துறை பஸ் வண்டிகள் லொறிகள் என்பனவற்றைத் நிறுத்திவைக்குமாறு தமிழக ஆளுநர் அலுவலகம் கேட்டுள்ளது சகல பாடசாலைகள் கல்லூரிகள் என்பவற்றுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சென்னை நகரில் நேற்றிரவு முதல் ஆறு அம்புலன்ஸ் வண்டிப்பிரிவுகள் மற்றும் வெடி குண்டு செயலிழக்க வைக்கும் விசேட பாதுகாப்புப் பிரிவு என்பன தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஜனாதிபதி வெங்கட்ராமனின் பட்டுக் கோட்டை வீட்டினருகே வெடி குண்டு ஒன்று காணப்பட்டது, எனினும் இது பின்னர் பொலிஸாரால் செயலிழக்க வைக்கப்பட்டது.

---

## வெளிவாரி கலைத்தேர்வில் அதிக தமிழ் மாணவர் சித்தி

1990-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி நிலையத்தால் நடாத்தப்பட்ட கலைமுதல் தேர்வு பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப் பரீட்சையில் கடந்த காலங்களை விடக் கூடுதலான தமிழ் மாணவர்கள் சித்தி அடைந்துள்ளதாகத் தெரிகின்றது. 75% அதிகமான தமிழ் மாணவர்கள் சித்தி அடைந்திருப்பதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (ப 10)

## சுதந்திர தினத்தில் நிவாரணம் வழங்கப்படவில்லை

ஸ்ரீலங்காவின் சுதந்திர தினமான நேற்று முன்தினம் சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூடப்பட்டிருந்ததால் பலர் நிவாரணம் பெறமுடியாது திரும்பினர்.

ஒரு சில சங்கக் கிளைகள் லீவு நாளாக இருந்தும் நிவாரணம் வழங்கியதைக் காண முடிந்தது. (36, 66, 71)

## பண்ணை வீதியை திருத்தக் கோரிக்கை

தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்து கஷ்டத்தைப் போக்க பண்ணைத்தாம்போதியைத் திருத்த நடவடிக்கை எடுக்குமாறு வேலணை உதவி அரச அதிபர் தளையசிங்கம் யாழ் அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளார். (36)

## சாக்கினுள் சடலமாக மீட்பு

காணாமற்போன புத்த பிக்கு சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் பேஹெலியகொட பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ளது

இந்தப் பிக்கு சாக்கு ஒன்றினுள் சடலமாக இருக்க, அவரது பௌத்த விகாரைக்கு பின்புறமாக உள்ள சதுப்பு நிலத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டார்.

இது தொடர்பாக இந்த விகாரையின் இரு பணியாளர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (33)

## உருத்திரபுரம் தாக்குதலில் மேலும் ஒருவர் மரணம்

நேற்று முன்தினம் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் மேலும் ஒருவர் நேற்றுக் கிளிநொச்சி வைத்தியசாலையில் இறந்தார்.

நீவிலைச் சேர்ந்த அப்பு (65) என அழைக்கப்படுபவரே இறந்தவராவார். (70)

---

**600 ஒய்வூதிய...**

ஏற்பாடுகள் செய்துவருவதாகசெயலக பிரதம கணக்காளர் தெரிவித்தார்

காசோலைகள் எழுதப்பட்டதும் இது பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் இதற்காக வீணாகச் செயலகத்திற்கு எவரும் அலைந்துதிரியவேண்டாம் எனவும் அவர்கேட்டுக் கொள்கிறார் (66)

---

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்வியங்காடு டச்சு வீதி, 'லஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 06- 02- 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.